DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.2 MADURANTAKAM

Calender : CC 79/2005

Miscellaneous :

Sessions : PW 3

Deposition of Witness for

**எதிரி ஆஜரில்லை எதிரி தரப்பில் 355 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

| | |
|---|---|
| Name | சுரேஷ் |
| Father / Husband Name | பிச்சை |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 20.01.2026

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது கரூரில் வசித்து கோழி வியாபாரம் செய்து வருகிறேன். எதிரி ரமேஷ் என்பவரை தெரியும். 06.03.2003 ம் தேதி எனக்கு சொந்தமான TN 39 A 3090 என்ற பதிவெண் கொண்ட லாரியில் பல்லடத்தில் கோழிகளை ஏற்றிக்கொண்டு எதிரி ரமேஷ் என்பவர் லாரியை ஓட்டிவந்தார். நான் லாரியின் பின் சீட்டில் உட்கார்ந்திருந்தேன். பின்னர் கோழி லோடுகளை சென்னையில் இறக்கி வைத்துவிட்டு மீண்டும் கரூர்-க்கு செல்லும்போது GST ரோடு அச்சரப்பாக்கம் வரும்போது நான் தூங்கிக்கொண்டிருந்தேன், டமால் என்று சத்தம் கேட்டு எழுந்து பார்த்தபோது லாரி கவிழ்ந்திருந்தது. எனக்கு தலையில் காயம் ஏற்பட்டது. நான் கீழே இறங்கி பார்த்தபோது 3 சக்கர வாகனத்தின் மீது மோதி லாரி விபத்து ஏற்பட்டிருந்தது. அந்த 3 சக்கர வாகனத்தில் வந்தவர் இறந்துவிட்டதாக சொன்னார்கள். நான் மருத்துவமனைக்கு சென்றுவிட்டேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**(பகுதி பிறழ் சாட்சியாக கருதப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணைக்கு அனுமதி கோரப்பட்டது அனுமதி அளிக்கப்பட்டது)**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

2. 06.03.2003 ம் தேதி கோழி லோடுகளை சென்னையில் இறக்கிவிட்டு மறுநாள் விடியற்காலை 3.30 மணிக்கு தொழுப்பேடு அருகே வரும்போது முன்னால் சென்ற 3 சக்கர வாகனத்தின் மீது லாரியை எதிரி ரமேஷ் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் வந்து மோதி விபத்து ஏற்படுத்தினார் என்றால் இல்லை. அந்த 3 சக்கர வாகனத்தில் வந்தவர் சம்பவயிடத்திலேயே இறந்துவிட்டார் என்றால் ஆமாம். மேற்படி விபத்தை நேரடியாக பார்த்ததாக போலிசாரிடம் கூறிவிட்டு எதிரி எனது ஓட்டுநர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.